# சீர்காழி நகராட்சி



2020 –ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28.04.2020 செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கை.

முன்னிலை. திருமதி.P.தமிழ்ச்செல்வி.B.A.,
தனி அலுவலர் (ம) ஆணையர்,
சீர்காழி நகராட்சி.

| | | |
|---|---|---|
| பொருள் எண்-1 | சீர்காழி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில ஒப்பந்த அடிப்படையில் குப்பை அகற்றும் வாகனத்தை இயக்க ஓட்டுநர் ஒருவருக்கு பணி ஆணை நாள்:21.08.2019 –ன் படி பணிபார்க்கப்பட்டு வருகிறது . 31.03.2020 வுடன் ஒப்பந்த காலம் முடிவடைவதால் மாவட்ட ஆட்சியரின் விலைப்பட்டியல் 2020 ஜீன் மாதம் பெறப்பட்டு ஒப்பந்த புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள போதிய அவகாசம் இல்லாத சூழ்நிலையில் உள்ளதாலும் மாவட்ட ஆட்சியர் நாகப்பட்டினம் செயல்முறைகளின் 2019–2020 ஆம் ஆண்டின் அதே விலை விகிதத்தில் ஒப்பந்ததாரர் இசைவினை கேட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர் சம்மதம் தெரிவித்துள்ளார்.தற்போது நிர்வாக நலன் கருதி கூடுதலாக ஒரு ஓட்டுநரையும் சேர்த்து இரண்டு ஓட்டுநர்களுக்கு மூன்று மாதத்திற்கு செலவீனம் கணக்கீடு செய்யப்பட்டது,ரூ 85,000/– ஆகும். 1.04.2020 முதல் 30.6.2020 வரை மூன்று மாத காலத்திற்கு மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு , தற்போது உள்ள பணி உத்தரவின்படி பணி நீட்டிப்பு செய்திடவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்காகும் தோராய செலவீனம் ரூ85,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(அ–கு) 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கவும் பணிகள் மேற்கொள்ளவும்,மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க. எண் : 1895/2019/எச்1) | நகர்மன்ற தீர்மான எண்–473 நாள். 28.04.2020. அனுமதிக்கப்படுகிறது. |
| பொருள் எண்-2 | நாகப்பட்டினம் மாவட்டம் ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண் 5615/2020/ E1 நாள் : 29.03.2020 ன்படி , கொரோனா வைரஸ் COVID-19 – தொற்று நோய் தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள ரூ 3.00 லட்டம் ஒதுக்கீடு வரப்பெற்ற ஆணை தனி அலுவலர் பார்வைக்கு பதிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது. | நகர்மன்ற தீர்மான எண்–474 நாள். 28.04.2020. அனுமதிக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| | அலுவலகக் குறிப்பு :<br>மேற்கண்டவாறு கொரோனா தடுப்பு நடவடிக்கைக்கு வரப்பெற்ற ரூ3.00 லட்சம் முன் அனுமதியுடன் செலவீனம் அனுமதிக்கலாம்.<br>(ந.க. எண் : 1211/2020/எச்1) | |
| பொருள் எண்-3 | நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் , ந.க.எண்:3336/J2/2020–13 நாள் 09.04.2020 கடிதத்தில் , கொரோனா தடுப்பு நடவடிக்கைக்கு கிருமிநாசினிகள் , பாதுகாப்பு உபகரணங்கள் , துப்புரவு பொருட்கள் வாங்குவதற்கு ரூ12.00 லட்சம் அனுமதிக்கப்பட்டு உள்ள விபரம் பார்வைக்கும் , பதிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு :<br>1.பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று , மேல் நடவடிக்கை தொடர மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2.தீர்மான பொருளில் , இப்பொருள் குறித்து பதிவு செய்து , அனுமதிக்கலாம்,<br>(ந.க. எண் : 1034/2020/எச்1) | நகர்மன்ற தீர்மான எண்–475 நாள். 28.04.2020. அனுமதிக்கப்படுகிறது. |
| பொருள் எண்-4 | சீர்காழி நகராட்சி – சீர்காழி காளியம்மன் கோயில் தெருவில் வசிக்கும் திருமதி மகாலெட்சுமி. க/பெ. திருஞான அமுதன் என்பவர் சீர்காழி நகராட்சி மீது சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்22/2020 பிளாஸ்டிக் பொருள் விற்பது சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார், எதிர் வழக்குரை தாக்கல் செய்ய நகராட்சி வழக்கறிஞர் திரு. இ. செல்வராஜ் ஆஜராகி வாதாடி வருகிறார். வழக்கறிஞர் திரு. இ. செல்வராஜ் தனது 18.03.2020 ஆம் நாளிட்ட கடிதத்தின் வாயிலாக வழக்கறிஞர் கட்டணம் ரூ 7,250/– ஐ வழங்கும் படி கேட்டுக்கொண்டுள்ளார். எனவே மேற்படி தொகை ரூ 7,250/– ஐ நகராட்சி வழக்கறிஞர் அவர்களுக்கு வழஞ்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(அ–கு)1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கவும் பணிகள் மேற்கொள்ளவும்,மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க. எண் : 481/2020/எச்1) | நகர்மன்ற தீர்மான எண்–476 நாள். 28.04.2020. அனுமதிக்கப்படுகிறது. |
| பொருள் எண்-5 | நாகப்பட்டினம் மாவட்ட நீதிபதி மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 75/2020/சி2 நாள் 23.04.2020 உத்திரவில், கொரோனா நோய் தொற்றினை தடுக்கும் பொருட்டு , இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 144–ன் கீழ் ஊரடங்கு நடைமுறையில் இருக்கும் காலத்தில் , பொது மக்கள் எவ்வித விழிப்புணர்வுமின்றி முகக்கவசம் அணியாமல் பொது வெளியில் செல்வது தவறான செயலாகும் எனவும் , பொதுமக்கள் நலன் கருதி 24.04.2020 முதல் வெளியில் செல்லும் அனைத்து பொது மக்களும் மற்றும் அரசு தனியார் அலுவலகங்களில் பணியாற்றுவோர் முகக்கவசம் கண்டிப்பாக அணிந்திருத்தல் வேண்டும் எனவும், முகக்கவசம் அணியாமல் வெளியில் வரும் நபர்களுக்கு ரூ 100/– அபராதம் விதிக்கப்படும் என உத்தரவிடப்பட்டுள்ளதை , மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் , சமர்பிக்கப்படுகிறது. | நகர்மன்ற தீர்மான எண்–477 நாள். 28.04.2020. அனுமதிக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| | (அ–கு1.பதிவு செய்யலாம்<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட உத்தரவை நடைமுறைப்படுத்தலாம்.<br>(ந.க. எண் : 1375/2020/எச்1) | |

(ஒம்) முன்னிலை. திருமதி.P.தமிழ்ச்செல்வி.B.A.,
தனி அலுவலர் மற்றும் ஆணையர்,
சீர்காழி நகராட்சி.

இடம்–சீர்காழி
நாள்–28.04.2020

/உண்மை நகல்/

ஆணையர்,
சீர்காழி ந கராட்சி.